ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 4.10 – ஆய்ச்சியர்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 4.10 – ஆய்ச்சியர்

‡ ஆய்ச்சியர் அழைப்ப வெண்ணெய் உண்டொரு கால் ⋆
ஆல் இலை வளர்ந்த எம் பெருமான் ⋆
பேய்ச்சியை முலை உண்டிணை மருதிறுத்துப் ⋆
பெரு நிலம் அளந்தவன் கோயில் ⋆
காய்த்த நீள் கமுகும் கதலியும் தெங்கும் ⋆
எங்கும் ஆம் பொழில்களின் நடுவே ⋆
வாய்த்த நீர் பாயும் மண்ணியின் தென்பால் ⋆
திருவெள்ளியங்குடி அதுவே ‖ **4.10.1** ‖

ஆநிரை மேய்த்தன்றலை கடல் அடைத்திட்டு ⋆
அரக்கர் தம் சிரங்களை உருட்டி ⋆
கார் நிறை மேகம் கலந்ததோர் உருவக் ⋆
கண்ணனார் கருதிய கோயில் ⋆
பூ நீரைச் செருந்தி புன்னை முத்தரும்பி ⋆
பொதும்பிடை வரி வண்டு மிண்டி ⋆
தேன் இரைத்துண்டங்கின் இசை முரலும் ⋆
திருவெள்ளியங்குடி அதுவே ‖ **4.10.2** ‖

கடு விடம் உடைய காளியன் தடத்தைக் ⋆
கலக்கி முன் அலக்கழித்து ⋆
அவன் தன் படம் இறப் பாய்ந்து பல் மணி சிந்தப் ⋆
பல் நடம் பயின்றவன் கோயில் ⋆
படவரவல்குல் பாவை நல்லார்கள் ⋆

பயிற்றிய நாடகத்தொலி போய் ⋆
அடை புடை தழுவி அண்டம் நின்றதிரும் ⋆
திருவெள்ளியங்குடி அதுவே ‖ **4.10.3** ‖

கறவை முன் காத்துக் கஞ்சனைக் காய்ந்த ⋆
காளமேகத் திரு உருவன் ⋆
பறவை முன் உயர்த்து பாற்கடல் துயின்ற ⋆
பரமனார் பள்ளி கொள் கோயில் ⋆
துறை துறை தோறும் பொன் மணி சிதறும் ⋆
தொகு திரை மண்ணியின் தென்பால் ⋆
செறி மணி மாடக் கொடி கதிர் அணவும் ⋆
திருவெள்ளியங்குடி அதுவே ‖ **4.10.4** ‖

பாரினை உண்டு பாரினை உமிழ்ந்து ⋆
பாரதம் கை எறிந்து ⋆
ஒரு கால் தேரினை ஊர்ந்து தேரினைத் துரந்த ⋆
செங்கண் மால் சென்றுறை கோயில் ⋆
ஏர் நிரை வயலுள் வாளைகள் மறுகி ⋆
எமக்கிடம் அன்றிதென்றெண்ணி ⋆
சீர் மலி பொய்கை சென்றணைகின்ற ⋆
திருவெள்ளியங்குடி அதுவே ‖ **4.10.5** ‖

காற்றிடைப் பூளை கரந்தென அரந்தை உறக் ⋆
கடல் அரக்கர் தம் சேனை ⋆
கூற்றிடைச் செல்லக் கொடுங்கணை துரந்த ⋆
கோல வில் இராமன் தன் கோயில் ⋆
ஊற்றிடை நின்ற வாழையின் கனிகள் ⋆
ஊழ்த்து வீழ்ந்தன உண்டு மண்டி ⋆

சேற்றிடைக் கயல்கள் உகள் திகழ் வயல் சூழ் ⋆
திருவெள்ளியங்குடி அதுவே ॥ **4.10.6** ॥

ஒள்ளிய கருமம் செய்வன் என்றுணர்ந்த ⋆
மாவலி வேள்வியில் புக்கு ⋆
தெள்ளிய குறளாய் மூவடி கொண்டு ⋆
திக்குற வளர்ந்தவன் கோயில் ⋆
அள்ளி அம் பொழில் வாய் இருந்து வாழ் குயில்கள் ⋆
அரி அரி என்றவை அழைப்ப ⋆
வெள்ளியார் வணங்க விரைந்தருள் செய்வான் ⋆
திருவெள்ளியங்குடி அதுவே ॥ **4.10.7** ॥

முடி உடை அமரர்க்கிடர் செய்யும் ⋆
அசுரர் தம் பெருமானை ⋆
அன்றரியாய் மடி இடை வைத்து மார்வை முன் கீண்ட ⋆
மாயனார் மன்னிய கோயில் ⋆
படி இடை மாடத்தடி இடைத் தூணில் ⋆
பதித்த பன் மணிகளின் ஒளியால் ⋆
விடி பகல் இரவென்றறிவரிதாய ⋆
திருவெள்ளியங்குடி அதுவே ॥ **4.10.8** ॥

குடி குடி ஆகக் கூடி நின்றமரர் ⋆
குணங்களே பிதற்றி நின்றேத்த ⋆
அடியவர்க்கருளி அரவணைத் துயின்ற ⋆
ஆழியான் அமர்ந்துறை கோயில் ⋆
கடி உடைக் கமலம் அடி இடை மலரக் ⋆
கரும்பொடு பெருஞ்செந்நெல் அசைய ⋆

வடிவுடை அன்னம் பெடையொடும் சேரும் ⋆
வயல் வெள்ளியங்குடி அதுவே ॥ **4.10.9** ॥

‡ பண்டு முன் ஏனம் ஆகி அன்றொரு கால் ⋆
பார் இடந்தெயிற்றினில் கொண்டு ⋆
தெண் திரை வருடப் பாற்கடல் துயின்ற ⋆
திருவெள்ளியங்குடியானை ⋆
வண்டறை சோலை மங்கையர் தலைவன் ⋆
மான வேல் கலியன் வாய் ஒலிகள் ⋆
கொண்டிவை பாடும் தவம் உடையார்கள் ⋆
ஆள்வர் இக்குரை கடல் உலகே ॥ **4.10.10** ॥

அடிவரவு — ஆய்ச்சியர் ஆநிரை கடு கறவை பாரினை காற்று ஒள்ளிய முடி குடி பண்டு அறிவது

ஆய்ச்சியர் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்